அதிக ஊதியம் தர ஆசைதானும் ஆனல்...!

Phone No 4502 — விலை அரை அணா

Regd. No. M. 5458 — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (20—4—50) ❁ வெளியூர் (21—4—50) [இதழ் 230

'பணமில்லை' பல்லவி பாடுகிறார் கல்வி அமைச்சர்

ஆசிரியர்களின் அவலநிலை மாற வழியில்லை

புகழ்மாலை சூட்டி பொறுப்பை சுமத்தும் தந்திரம்!

பள்ளி ஆசிரியர் கூட்டத்தில் கல்வி அமைச்சர்

"நாட்டின் சிறப்பு ஆசிரியர்கள் கையிலேயே இருக்கிறது ஆசிரியர்கள், மாணவர்களின் உடல்நலம், உளநலம் முதலியனவற்றைக் குறிக்கோளாகக்கொண்டு பணியாற்ற வேண்டும்"

ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஊதியம் மிகக் குறைந்த ஊதியமே என்பதை நான் அறிவேன். ஆனல் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க, அதிக வருவாய்க்கு வழி தேட வேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

இது, கல்வி அமைச்சர் தோழர் மாதவமேனன். அண்மையில் எழும்பூர் ஆசிரியர் கழக ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய போது வெளியிட்ட கருத்துகள்.

நாட்டின் உயர்வு, சிறப்பு அனைத்தும் பள்ளி ஆசிரியர்களின் கையிலேயே உள்ளது.

மாணவரின் உடல் நலம், உள நலம் ஆகியவற்றைச் செம்மையுறச் செய்ய வேண்டிய பொறுப்பு ஆசிரியருடையது.

இவை நாம் ஆசிரியர்கள் மீது அமைச்சர் சுமத்தியுள்ள பொறுப்புகள். இவற்றுள் முன்னது புகழ்மாலை, பின்னது பொறுப்புச்சுமை, புகழ் மாலையை அணிவித்துத்தானே பொறுப்புச் சுமையைச்சுமத்த வேண்டும்! எனவே, இரண்டையும் முறைப்படி செய்து விட்டார் கல்வி அமைச்சர்!

அமைச்சர் சூட்டிய புகழ் மாலையையும், சுமத்திய பொறுப்பையும் சுமந்து கொண்டு எதிரே நிற்கும் ஆசிரியர்களைப் பார்த்து-தான் "உங்களுக்கெல்லாம் அளிக்கப்படும் ஊதியம் மிகக் குறைவு என்பது எனக்குத் தெரியும். ஆனல், ஊதியத்தை உயர்த்த வருவாய்க்கு வழி தேடியாக வேண்டும்" என்கிறார்.

கல்வி அமைச்சர் ஆசிரியர்களிடையே செய்யும் இந்த உபதேசம், இன்று நேற்று செய்யப்படும் உபதேசமல்ல. பல ஆண்டுகளாக, ஆசிரியர்களைக் கல்வி அமைச்சர்கள் சந்திக்க நேரும்போதெல்லாம், இதே சாக்கைத்தான் தந்து வருகிறார்கள்.

பொதுவாக, எடுத்ததற்கெல்லாம் 'பணம் இல்லை' பல்லவியைப் பாடிவரும் அமைச்சர்கள், இப்படிப் பேசுவது கண்டு நாம் ஆச்சரியப்படத் தேவை இல்லையாயினும், ஆசிரியர்களிடையே இப்படிப்பட்ட பல்லவி இன்னமும் பாடப்படுவது கண்டு வருந்தாமலிருக்கமுடியவில்லை.

நாட்டு மக்களின் அறிவைத் திருத்தும் அரும்பணியை மேற்கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். இதனை நாம் சொல்லித்தான் அமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. அவரே சொல்லுகிறார் "உங்கள் கையில்தான் நாட்டின் சீரும் சிறப்பும் உளது" என்று.

இங்ஙனம் நாட்டுக்குஇன்றியமையாத வேண்டப்படும் பணியைச் செய்யும் பள்ளி ஆசிரியர்களை வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம், ஆட்சியாளருக்கு உண்மையாகவே இருக்குமானல், ஆசிரியர்களைத் பொறுத்த வரையிலாவது தமது பழைய

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

லியோபால்ட் பதவிப் பிரச்னை முதலில் தீர்க்கப்படவேண்டும்

ஆண்ட்வொப் துறைமுக தொழிலாளர்கள் தீர்ப்பு

பிரஸ்ஸல்ஸ், ஏப். 19—

லியோபால்ட் பதவிக்கு வரும் விஷயமாக ஏற்பட்டுள்ள பெல்ஜிய அரசியல் நெருக்கடி தீர்க்கப்படும்வரை, அட்லாண்டிக் ஒப்பந்த ஏற்பாட்டின்படி அமெரிக்காவிலிருந்து வந்துள்ள ஆயுதங்களைக் கப்பலிலிருந்து இறக்க முடியாதென்று ஆண்ட்வெர்ப் துறைமுகத் தொழிலாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

பெல்ஜிய போக்குவரத்து தொழிலாளர் யூனியன், இது விஷயமாக விளக்குகையில், தான் கம்யூனிஸ்டுகள்பேச்சை கேட்டு இப்படிச்செய்யவில்லை என்றும், பிற்போக்குள்ளதும் அடக்குமுறையைக் கையாளக் கூடியதுமான சர்க்கார் ஏற்பட்டால், இந்த ஆயுதங்கள் தங்கள்பேரிலேயேபிரயோகிக்கப்படலாம் என்று பயப்படுவதாகவும் விளக்கியிருக்கிறது.

அமெரிக்கஆயுதம்கொண்ட கப்பல் இன்னும் 10 நாட்களில் வந்துசேரவிருக்கிறது. அதற்குள் இந்தத் தகராறு தீர்க்கப்படாவிட்டால், இந்நிலைமையைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அஞ்சப்படுகிறது.

லியோபல்ட் மன்னர் இளவரசர் பாடோயனுக்கு அதிகாரம் ஒப்படைப்பதுகூட பார்லிமெண்ட் மூலமாகவே செய்ய வேண்டும் என்றும், சொந்த ஹோதாவில் கூடாது என்றும் சோஷலிஸ்டுகள் வற்புறுத்துகின்றனர்.

மலேயா கலகத்தை ஒடுக்க ஆஸ்திரேலியா உதவி

லண்டன், ஏப். 19—

மலேயாவுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் கோரினால், அதை தீவிரமாகக் கவனிக்கப்படும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் கூறியுள்ளது இங்குள்ள வட்டாரங்களில் வரவேற்கப்படுகிறது.

இத்தகைய கோரிக்கையை பிரிட்டன் இன்னும் அனுப்பவில்லை என்றும், மே 15 தேதி சிட்னியில் கூடும் காமன்வெல்த் ஆலோசனைக் கமிட்டியில் இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

ஆஸ்திரேலியா, விமான கடற்படை பலம் அதிகரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

ஹாங்ஹாங், ஏப். 19—

சால் நதி டெல்டாவிலுள்ளதும், சீன தேசிய வாதிகளிடம் கடைசியாக உள்ளதுமான லிண்டின் தீவு மீது, சீன கம்யூனிஸ்ட் படைகள் பாய்ந்து பிடித்துக் கொண்டன. ஹாங்ஹாங் பிரிட்டிஷ் பிரதேசத்திலிருந்து இத்தாக்குதலைக் காண முடிந்ததாம். 1000-க்கு மேற்பட்ட கம்யூனிஸ்டுத் துருப்புகள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டதாம்.

நாங்கள்மட்டுமென்ன சளைத்தவர்களா?

—(0)—

காங்கிரஸ் மேலிடத்துக்கு பயப்படவே முடியாது!

—(0)—

ஐக்கிய மாகாண சட்டசபை காங்கிரஸ்காரரின் புரட்சி

லக்னோ, ஏப் 18—

காங்கிரஸ் பொதுக் காரியதரிசியின் உத்திரவையும் பொருட்படுத்தாமல், சமீபத்தில் 'புரட்சி' செய்த காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் தனியிடத்தில் உட்கார்ந்தார்கள்

சட்ட சபை ஆரம்பித்தபோது இவர்கள் சட்டசபையில்இல்லையாம். சிறிது நேரம் கழித்துக் கும்பலாக வந்து தனியிடத்தில் உட்கார்ந்து கொண்டார்களாம்; பண்டிதபந்துக்கு எதிராகப் புரட்சி செய்தார்களென்று இரண்டு காங்கிரஸ்காரர்களை விலக்கக் காங்கிரஸ் கட்சி முடிவு செய்ததிலிருந்து, இக்கோஷ்டியினர் தனி இடத்தில் உட்கார்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு தனியிடத்தில் உட்காருவதால், எந்த நிலை ஏற்பட்டாலும் எதிர்த்து நிற்கத் தயார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

நேற்று இந்த அங்கத்தினர்களுக்குக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி தோழர் காளா வெங்கட்ராவ் கடிதம் எழுதியிருந்தார். எல்லா அங்கத்தினரும் காங்கிரஸ் கட்சித் தலைவராகிய பண்டிக பந்திடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து உட்கார வேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிட்டால் ஏன் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும் கடிதத்தில் கேட்கப் பட்டிருந்தது.

* * *

இவ்வளவு பயமுறுத்தியும் அவர்கள் பயப்படவில்லை! ஐக்கிய மாகாணத்து சட்டசபையில் 25 காங்கிரஸ் அங்கத்தினர்கள் புரட்சி செய்தார்கள். "பண்டிதபந்த் சர்க்கார், மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதில்லை முதலாளிகளின்கைபாவையாகிவிட்டது;வேண்டாம்இந்த அட்டகாசம்" என்று குற்றம் சாட்டினார்கள்; கட்சி ஒழுங்குக்கு மீறினார்கள் என்று கூறி, இந்தக் காங்கிரஸ்காரர்களின் தலைவர்கள் என்று கூறப்படும், தோழர் திருலோகசிங்ராடே ஷியாம் சட்டசபைக்கட்சியிலிருந்தே வெளியேற்றப்பட்டார்கள்!

சென்னையில், தோழர் பிரகாசத்தின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக மிரட்டியது காங்கிரஸ் மேலிடம். பயந்து பணிந்துவிடுவார் என்றுநினைத்தார்கள். நடக்கவில்லை; "பார்த்துவிடுகிறேன் ஒரு கை" என்று பிரகாசம் எதிர்த்து நின்றதின்பேரில் "வம்பு செய்யாதீர்கள் வேண்டுவன செய்கிறோம், டில்லி வாருங்கள் என்று பண்டித நேருவும் தோழர் பட்டேலும் அழைப்பு அனுப்பியுள்ளனர்!

இப்போக்கை ஐக்கியமாகாணத்து 'கோஷ்டி' கவனிக்காமல் இருக்கவில்லை. "பிரகாசத்திடம் அடிபணிந்துவிட்டார்கள்; நாம் மட்டும் ஏன் பயப்படவேண்டும்; எதிர்த்து நின்றே பார்ப்போம் என்றமுடிவுக்கு வந்துள்ளனர்.

புரட்சி செய்துள்ள தோழர் திரிலோகசிங்கின்'கோஷ்டி'க்குத்தபால் தந்தி இலாகா மந்திரி தோழர் அஹமத்கித்வாயின் ஆதரவும், பண்டித நேருவின் ஆசியும் இருப்பதாகத் தெரிகிறது.

லாட்வியா விமானப் போர்

ரஷ்யர்கள்வேண்டுமென்றே சுட்டனராம்!

ரஷ்யா குறிப்புக்கு யு. எஸ். பதில்

வாஷிங்டன், ஏப். 19—

லாட்வியா மீது ஏற்பட்டதாகக் கூறும் விமானச் சண்டை விஷயமாக, யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ரஷ்யா அனுப்பியிருந்த கண்டனக் குறிப்புக்கு அமெரிக்க சர்க்காரிடமிருந்து பதில் வந்துவிட்டது

அமெரிக்கா தன் பதிலில், பாதுகாப்புக்கு எதுவும் வைத்திராத அமெரிக்க விமானத்தின்மீது ரஷ்யர்கள் வேண்டும் என்றே சுட்டனர் என்றும், இதனல் 8 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்றும், இதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கூறியிருக்கிறது.

பால்டிக் பிரதேசத்தில் அச்சமயத்தில் இருந்த ராணுவ விமானம் அது ஒன்றுதான் என்றும், ஸோவியத் ஆதிக்கமுள்ள பிரதேசத்தில் அது பறக்கவில்லை என்றும், கடல் மீது விமானம் பறந்தபோதே சுட்டப்பட்டதென்றும் அப்பதிலில் கூறப்பட்டிருக்கிறது. —குளோப்

மாலை மணி

சென்னை 20—4—50 வியாழக்கிழமை

சுரண்டல்!

"சென்னை மாகாணம் அளவுக்குமீறி சுரண்டப்படுகிறதென்பது உண்மையல்லவா?" என்ற கேள்வி, இந்தியப் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்டது. கேட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் அல்ல—இருக்கமுடியாது. இந்தியப் பாராளுமன்றத்தில், இடம் பெருத காரணத்தால், வேறு யாராக இருக்கலாம்?

காங்கிரசுக்கு உழைத்த விவேகி, கதருடை யணிந்த தியாகி தோழர் திருமல்ராவ் கேட்டார் இதுபோன்ற கேள்வியை உணவு மந்திரியைப் பார்த்து!

'வரம்புகடந்தகேள்வி வம்பு பேசி நிற்காதே, உட்கார்' என்பதுதான் சபாநாயகரிடமிருந்து கிடைத்த பதில்.

சென்னை மாகாணம் (திராவிடநாடு) தனி நாடாக இருந்தால், ஆட்சியாளர் அரிசிக்காக மத்திய சர்க்காரைக் கேட்பதற்குப் பதிலாக பர்மாவைக் கேட்டிருப்பார்கள் வர்த்தக ஒப்பந்தத்தின்படி. 'பெரிய' அரசாங்கமாக இருக்கிறதே, அரிசிப் பஞ்சத்தைப் போக்க ஆவன செய்யுமென்றே முறையிட்டது இந்திய சர்க்காருக்கு மத்திய சர்க்கார் செய்த ஏற்பாடு.மாகாண உணர்ச்சிஇருப்பதே மதியீனம் எனக் கருதும் காங்கிரஸ் தலைவர்களையே கலக்கி இருக்கிறது. 40000—டன் அரிசியைஐக்கிய மாகாண அரசாங்கத்திடமிருந்து, அதாவது இந்தியாவின் பெயர் 'பாரத்'ஆகவேண் மென்றும் தேசீயமொழி 'இந்தி' என்றும் கூறும் புருஷோத்தமதாஸ் தாண்டனும், சேத்கோவிந்ததாஸும் தோன்றிய நாட்டின் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள் என்று உத்திரவிட்டது சென்னை அரசாங்கத்துக்கு. எம்முறையில்? 108 லட்சம் ருபாய் அதிகப் பணம் கொடுத்து! ஏன் என்று கேட்டால உயர்ந்த ரக அரிசி என்று கூறுகிருர் உணவு மந்திரி தௌலத்ராம். மலிவான வேறு மாகாண அரிசியைக் கொடுப்பதுதானே என்று கேட்டதிற்கு, யாராவது வாங்கித்தானே ஆகவேண்டும் என்று கூறுகிருர். அப்படி வாங்கும் நாடு பற்ருக்குறை வடநாட்டு மாகாணமாக ஏன் இருக்கக்கூடாது?

வங்கப் பஞ்சம் வந்தது, உணவுப் பொருள் இல்லாததினுல் அல்ல. பணமும், பண்டமும் முதலாளியின் கையில் சிக்கிக்கொண்டது! வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தார்கள் விலை கூடுதலாகக் கிடைத்ததென்று பஞ்சத்துக்குப் பலியானுர்கள் 40 லட்சம் வங்க மக்கள் அதற்குள் மறந்துவிட்டார்களா? —தேநிலை சென்னை மாகாணத்தில் மழையில்லை, பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளது. பணம் இல்லை. என்ருலும் உணவு வேண்டும், கொடு என்று கேட்டால் கள்ள வியாபார முதலாளி போன்று ஒரு கோடி ருபாய் அதிகமாகக் கேட்கிருர்கள் 40,000 டன் அரிசிக்கு! இந்த அளவில் அதிக விலை கொடுத்து சென்னை சர்க்கார் அரிசி வாங்க வேண்டுமானுல், 10 கோடி ருபாய் அதிகம் செலவழித்தாக வேண்டும். அவ்வளவு பணம் கொடுத்து அயல்நாட்டிலேயே வாங்கிக் கொள்ளலாமே! இதற்கு மத்திய சர்க்கார் ஏன், நமக்கு அவர்களுடன் தொடர்பு எதற்கு?

வடநாடு வேறு, தென்னுடு வேறு. தென்னுடு-திராவிட நாடு பிரிந்தால்தான் நம் வாழ்வு வளம் பெறும்; வடநாட்டின் சுரண்டல் ஒழிந்தால் தான் நமக்கு உய்பவழி உள்ளதென்று ஓயாமல் கூறிவந்துள்ளோம். இதற்குப் பல சான்றுகள் காட்டினேம். ஏளனம் செய்யப்பட்டோம், வகுப்புவாதம் பேசுகிருேமென்று! நாம் அன்று கூறினேம், அவர்கள் இன்று கூறுகிருர்கள். சென்னை மாகாணம் சுரண்டப்படுகிறதென்று தோழர் திருமல்ராவ் கூறுகிருர். அதிக விலை கேட்கிறீர்களே எங்களை மட்டும், இது அடுக்குமா என்கிருர் தோழர் அழகேசன். உயர்ந்த ரக அரிசியை நாங்கள் வேண்டுமென்று கேட்டோம் என்கிருர் தோழர் வெங்கட்ராமன். இது புதுடில்லி பாராளுமன்றத்தில். உணவு மந்திரி ஓயாமல் பதில் அளிக்கிருர் ஐக்கிய மாகாணத்துக்கு வக்காலத்து வாங்கி—தன் சொந்த மாகாணம் என்ற காரணத்தால். டில்லி வாழ்வு அலுத்துவிட்டிருக்க வேண்டும சென்னை அங்கத்தினருக்கு!

இங்கு-சென்னை சட்டசபையில் ஐக்கிய மாகாணத்து அரிசி அழுகிய வாடை வீசுகிறதாமே என்று கேட்டார் தோழியர் பேகம் அமிநத்தீன். ஆமாம், அவ்வாறுதான் மக்கள் புகார் செய்துள்ளனரென்று நம் உணவு மந்திரி (?) தோழர் ரோச் விக்டோரியா அறிவித்தார். உயர்ந்த அரிசி, ஊரிலேயே கிடைக்காத அரிசி ஒரு கோடி ருபாய் அதிகம் கொடுத்துத்தான ஆகவேண்டுமென்று அங்கு கூறுகிருர்கள்!

சென்னையில் வாங்கும் அரிசிக்கு இன்னும் கொஞ்சம் விலை அதிகம் கொடுங்கள் என்று அரிசி விலை அதிகரிப்பில் அக்கரையுள்ள அங்கத்தினர் ஒருவர் கேட்கமுடியாது, (கள்ள மார்க்கெட் விலையில்) ஐக்கிய மாகாண அரிசி வாங்க வேண்டும், அதற்கே பணம் இல்லை என்று ரோச்விக்டோரியா சமாதானம் கூறுகிருர்.

சென்னைக்கு வேண்டுவது அரிசி; அதிக விலை கொடுத்து வாங்க நேரிட்டிருந்தால், மத்திய அரசாங்கம் பண உதவி செய்திருக்கவேண்டும். அல்லது குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்றுஐக்கிய மாகாண சர்க்காரைப் பணித்திருக்க வேண்டும். இரண்டும் செய்யவில்லை, வடநாட்டு ஆதிக்கம் வலுத்துள்ள மத்திய அரசாங்கம்!

இவ்வளவு பாரபட்சத்துடன் சென்னை சர்க்கார் நடத்தப்பட்டுங்கூட, தனிநாடு—திராவிடநாடு அமைக்கப்பட வேண்டுமென்பதைத் தட்டிக்கழிக்கும் சென்னை காங்கிரஸ் சர்க்காரின் தன்மான உணர்ச்சியை நாம் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது!

பண்டித நேருவும் லண்டன் செல்வாரா?

லண்டன், ஏப். 19—

பாகிஸ்தான் பிரதம மந்திரி தோழர் லியாகத் அலிகான் இம்மாதக் கடைசியில் லண்டனுக்கு வரும்போது இந்தியாவின் முதல் மந்திரி பண்டித நேருவுடன் கூட வருவார் என்றும், இவ்விருவரும் பிரிட்டிஷ் பிரதமர் தோழர் ஆட்லியைச் சந்திக்கப் போகிறார்கள் என்றும் காசியிலிருந்து கிடைத்துள்ள செய்தி ஒன்று இங்குள்ள பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இச் செய்திக்கு டௌனிங் தெரு வட்டாரங்களிலும், இந்திய பாக்கிஸ்தான் மிஷனர் காரியாலயங்களிலும், காமன்வெல்த் உறவு ஆபீஸிலும் எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என்று 'ருயூடர்' நிருபர் அறிவிக்கிருர். முன்னதாகவே ஏற்பாடு செய்யாமல் இதைப்போன்றபெரிய இடத்து சந்திப்புகள் ஏற்படுவது வழக்கமில்லை என்றும், ஆனல் இந்த சந்திப்பு தேவையானதாக ஒருவேளை இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

உத்யோகபூர்வமாக இச் செய்தி தவறு என்று இந்திய மாளிகை உத்யோக பற்றற்றமுறையில் அறிவித்திருந்தாலும், தனக்குத் தகவல் இல்லை என்றும் இது விஷயமாக இந்திய சர்க்காருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகவும் அறிவித்திருக்கிறது.

மக்களுக்கு விமானப்பயிற்சி பீகார் சர்க்கார் திட்டம்

பாட்னு, ஏப். 19—

விமானப் பயிற்சியை மக்களுக்கு அளிப்பதற்காக பீகார் சர்க்கார் ஒரு திட்டம் வகுத்திருக்கின்றனர் 'ஏ' வகுப்பு விமான ஓட்டிகளாக பயிற்சிபெற 12 பேர்களுக்கு உபகாரச் சம்பளமும் 'ஏவல்' வகுப்பு விமான ஓட்டிகளாக பயிற்சிபெற 4 பேர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப் பயிற்சிக்காக மட்டுமே ரூ. 60000 செலவாகும் என்று தெரிகிறது.

பாரீஸில் போலீஸ்-கம்யூனிஸ்டு கைகலப்பு

பாரீஸ், ஏப். 19—

பாரிசிலும், பிரெஸ்டிலும், கம்யூனிஸ்டுகளுக்கும் போலீசாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் நேரடியான நடவடிக்கையில் இறங்கிவிட்டதாக இதற்கு அர்த்தமா என்று, பிரெஞ்சு அதிகாரிகள் கவலைப்படுகின்றனர்.

பம்பாய், ஏப். 19—

1951-ம் ஆண்டு மார்ச்சு முதல் தேதி, இந்தியாவின் ஜனத் தொகைக் கணக்கு மீண்டும் எடுக்கத் தகுந்த ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன. மார்ச்சு 1-ந் தேதிக்கு முன் 20 நாட்கள் மக்கள் எண்ணிக்கை பற்றிய எல்லாக் குறிப்புகளும் எடுக்கப்படும்.

அன்பளிப்பு எங்கே?

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

தலைமைக் காரியாலயம்! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெருது என்று அனைவரும் கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே!
வற்புறுத்திய நண்பர்களே!
ஆர்வம்காட்டிய அன்பர்களே!
யோசனை கூறிய தோழர்களே!

உங்கள் அன்பளிப்பு எங்கே?
அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

அதிக ஊதியம் தர..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்லவியை மறந்துவிட்டிருக்க வேண்டும். அல்ல—ஒழித்தே இருக்கவேண்டும்

சிந்தையில் 'சரி' எனப்படும் ஒரு செயலைத் துணிந்து நடைமுறைக்குக் கொண்டுவருவது தான் ஆட்சியாளர் கடன். ஆனல் நம் நாட்டு ஆட்சியாளர் பண்பு அதுவல்ல. சரி என்பார்கள்; அவசியந்தான் என்பார்கள்; போற்றுவார்கள் புகழ்வார்கள் ஆனல் இவை அனைத்தும் அப்படிப்பேசி, போற்றி, புகழும் நேரத்தோடு நிலையோடு,பேசுகின்ற மேடையோடு முற்றுப்பெற்றுவிடும். பேசிவிட்டு காரில் ஏறியதும், அவர்கள் பேசிய பேச்சு காற்றிலே பறந்துவிடும், காரின் வேகத்தைவிட வேகமாக!

ஆசை இருக்கிறது அதிகச் சம்பளம் கொடுக்க. ஆனல் வருவாய்க்கு வழி தேடவேண்டும் என்று பேசிய அமைச்சரைக் கேட்கிருேம். கல்வி அமைச்சர் என்ற முறையிலே, கல்வியின் நிலையை உயர்த்த கல்விபோதிக்கும் ஆசிரியரை வாழவைக்க தோழர் மாதவமேனனுர்திர ஆலோசித்துத் திட்டியதீவிர திட்டம் ஏதேனும்உண்டா? கல்விக்கு பணம் போதவில்லை என்று சொல்லப்படுமானுல், அந்நிலையை மாற்ற வேறுவழி என்ன கண்டார்கள் ஆட்சியாளர்கள்? கல்விக்கு மட்டுந்தானு பணம் இல்லை என்கிருர்கள். எடுத்ததற்கெல்லாம் அதே பல்லவி தான் பாடப்படுகிறது! இந்தப் பல்லவி ஒன்றுதானு போதாமையைப் போக்கு மருந்து. இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த நிலை நீடிப்பது? எத்தனை காலத்துக்கு அவல வாழ்வு வாழ்வது? எத்தனை காலத்துக்குப் பள்ளி ஆசிரியர்கள் என்ருல், பரிதாபத்துக்குரிய பிறவிகளாகக் காட்சி அளிப்பது? பள்ளி ஆசிரியர்களின் பணிச் சிறப்பு பற்றி அடுத்தடுத்துப் பேசுப அமைச்சர்கள்.இதுபற்றிபெல்லாம் சிந்திக்க மறுப்பது ஏனே? நாட்டிற்கு நற்பணியை-இன்றியமையாப் பணியைச் செய்யும் ஆசிரியர்களிடையே "இல்லை" என்ற பல்லவியை இடைவிடாது பேசவேண்டிய நிலை நமக்கு நேர்ந்திருப்பது குறித்து, கல்வி அமைச்சர்கள் வேதனைப்படாவிட்டாலும் வெட்கமாவது கொள்ள வேண்டாமா?

எனவே, இனியும் இத்தகைய நிலை நீடிக்க இடங்கொடுப்பதுஆட்சியாளருக்கு-ஜனநாயக ஆட்சியாளருக்கு அழகல்ல நிலையிலே மாற்றம் காணும் நினைப்பு அவர்களுக்குத்தேவை. அதற்காகக்கல்வித் துறையிலே உள்ள அறிஞர்களையும், கல்விக்குப்பொருள் தேடும் வழிவகைகளைக்கூற வல்ல பொருளாதார நிபுணர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுவது ஆட்சியாளர் கடன். அதுமட்டுமின்றி, மேனுடுகளில் கல்வி வளர்ச்சிக்கு என்னென்ன முறைகள் கையாளப்படுகின்றன, எப்படிப்பட்ட திட்டங்கள் வகுக்கப்படுகின்றன, ஆசிரியர்கள் எப்படியெல்லாம் ஆதரிக்கப்படுகின்றனர் என்பனவற்றையும் ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

இந்த முறைகளால் கல்வித் துறையில் முன்னேற்றம் காண முடியாவிடில், ஆட்சிமுறையே மாற வேண்டும் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட முடிவுக்கு ஆசிரியர்கள் வராவார்களேயானல், எதிர்காலத்தில் சமதர்ம ஆட்சியை அமைக்க, மாணவர்களை அவர்களே தயாரித்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை!

கோ. மா. தி. மு. கழக செயற்குழு அவசரக் கூட்ட அமைப்பு

கோ. மா. தி மு. க. செயற்குழுவின் அவசரக் கூட்டம் 23—4—50 ஞாயிறு காலை 10 மணிக்கு, கோவை நகர கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிற்கு வரவேற்புக்கமிட்டி அமைக்கவும், இன்னும் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றி முடிவு செய்யவும், செயற்குழு உறுப்பினர்கள் தவருமல வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்
பி. பழனிச்சாமி
செயலாளர்

இனி நடப்பவை

கோவில்பாளையம்:— (எஸ்.எஸ். குளம்) தி. மு. கழகத் துவக்க விழா, 23—4—50 ஞாயிறு மாலை தோழர் சுவாமி நரசிம்மன் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர் என். வி. நடராசன் அவர்கள் துவக்கி வைத்து சொற்பொழிவாற்றுவார். மற்றும், தோழர்கள் அ. ச. நடராசன், இளங்கோ முதலியவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

செங்கராம நல்லூர்:— 23-4—50 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை தி. மு. க. கிளையின் சார்பில் தோழர் ஆர். வி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பெருக்காற்றுவார்கள்.

* * *

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை:- தி. மு. க. சார்பில், 22—4—50 சனி இரவு 22 தர்மராஜாகோவில் தெருவில் செயற்குழுக் கூட்டம் தோழர் ம. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும் அதுபோது திறப்பு விழாபற்றி ஆலோசிக்கப்படும்.

* * *

சைதாப்பேட்டை:—மறுமலர்ச்சி சொற்பயிற்சிக் கூட்டம் 21—4—50 வெள்ளியன்று மாலை சடைகப்ப முதலித் தெருவிலுள்ள 2வது எண்ணுள்ள இல்லத்தின் மேல் மாடியில் கூடும். அதுபோது 'மதம் அவசியமா' என்று பொருள்பற்றி தோழர் டி. வி. தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைமையில் மலர் பேசுவர்.

* * *

உயன்புரம், சென்னை:—'குமரி' தமிழன்னை நாடக சபையின் செயற்குழுக் கூட்டம் 22—4—50 அன்று மாலை 6 மணிக்கு கழகக் கட்டடத்தில் நடைபெறும். தோழர் எம் சண்முக சுந்தரம் தலைமை வகிப்பார்.

* * *

சேலம் பொன்னம்மாபேட்டை:- தி. மு. க. கட்டிடத் திறப்பு விழா. 23—4—50 ஞாயிற்றுக்கிழமை காலை மல்லி செட்டித்தெருவில் அமைந்துள்ள "அழகிரி மன்றத்தில்" தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் க. அன்பழகன் கொடியேற்றுவிப்பார். அழகிரி படத்தினை தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திறந்து வைப்பார். கட்டிடத் திறப்பு விழா தோழர் சி. என் அண்ணாதுரை அவர்களால் மாலை விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

———

மதுரை மாவட்ட தி. மு. கழகங்களுக்கு

23—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு எனது "பனகல் இல்லத்தில்" மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். திண்டுக்கல் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்தபடி சோழவந்தானில் மாநாடு நடத்துவதற்கு வரவேற்புக் கமிட்டி அமைக்க வேண்டியிருப்பதால், எல்லா அங்கத்தினர்களும் இதையே அழைப்பாகக்கொண்டு வரவேண்டுகிறேன். அத்துடன் தோழர் அண்ணாத்துரை அவர்களின் சுற்றுப்பிரயாண வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்யவேண்டியிருப்பதாலும், இதுவும் செயலாளரால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களை ஆராய வேண்டியிருப்பதாலும் செயற்குழுவினர் அனைவரும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆவுடையப்பன்

செயலாளர் ம. மா. தி. மு. கழகம்

சோழவந்தான்

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ அ. பை.
முன்வரவு		683—3—0
ஏ. பி. வெள்ளைச்சாமி, அதனூர்		3—0—0
ரா. கிருட்டிணன், சென்னை		1—0—0
மு இ. மா. சாமி, மதுரை		2—0—0
தி. மு. க. திருச்சி பெரியகடை வீதி கிளை		10—0—0
ச. மாதவன், அரகண்டநல்லூர்		5—0—0
க. நெடுஞ்சோழன், திருப்பத்தூர் (வ-ஆ)		5—0—0
ஆர். எஸ். சுந்தரம், சென்னை		4—0—0
சு. ஆறுமுகம், இடிகரை		2—0—0
எம். எஸ். ராமசாமி,	சென்னை	2—0—0
ஆ. வீராசாமி,	,,	1—0—0
வி. இலக்குமணன்,	,,	1—0—0
இரா. காளி,	,,	1—0—0
நாத்திகன் செ. கோ. முனுசாமி,	,,	2—0—0
டி. தங்கையா ஆசிரான், சிவகாசி		3—0—0
நாத்திகன் காசிராசன், சென்னை		0—8—0
பொ. துரைபாண்டியன், தூத்துக்குடி		5—0—0
ஏ. எஸ் ராமன்,	சென்னை	5—0—0
சத்திபவாணிமுத்து.	,,	5—0—0
பி. எஸ். மாரியப்பன்,	,,	1—0—0
பி. சி. தட்சிணாமூர்த்தி,	,,	1—0—0
எம். துரைவேலு,	,,	1—0—0
எம். அய்யாசாமி, மதுரை		5—0—0
ஏ. ராமசாமி,	நாகை	5—0—0
எல் குமாரமுத்து,	,,	2—0—0
எஸ். எஸ் மாணிக்கம்	,,	2—0—0
டி. கணபதி,	,,	1—0—0
சு. அம்மாசி,	,,	1—0—0
நா. செ. குழந்தைசாமி,	,,	1—0—0
டி. எஸ். எஸ். சிவக்கொழுந்து.	,,	1—0—0
பெ. பேயாண்டி.	,,	1—0—0
எம். ராசு,	,,	1—0—0
கே. கே. சித்திரவேலு.	,,	1—0—0
கே. பாப்பையன்,	,,	2—0—0
வி. எஸ். பெருமாள்,	,,	2—0—0
இரா. கல்யாணசுந்தரம்	,,	1—0—0
கோ. தர்மலிங்கம்,	,,	1—0—0
இ. ஆர். ராதா,	கணியூர்	5—0—0
சுப்பிரமணியம்,	,,	2—0—0
பழனியப்பன்,	,,	3—0—0
கே. என். ஏ. முத்து.	,,	2—0—0
எம். உதுமான்,	,,	2—0—0
கே. எஸ் எம். ஹனீபா:	,,	2—0—0
கே. ஏ. முருகேசன்,	,,	2—0 0
சி. ஆறுமுகம்,	,,	2—0—0
எம். சின்னப்பா,	,,	1—0 0
எஸ். அப்துல்ரஷீத்.	,,	1—0—0
கே. டி. முத்துசாமி,	,,	1—0—0
கே. முருகேசன்,	,,	1—0—0
டாக்டர் பி. எம், முகம்மது,	,,	1—0—0
கே. ஏ. மாணிக்கம்,	,,	1 0—0
எம். என். அபூபக்கர்,	,,	0—8 0
வி. சி. கிருஷ்ணசாமி,	துறையூர்	1—0—0
வி. இலக்குமணன்,	,,	2—0—0
பி. என். கிருஷ்ணசாமி.	,,	2—0—0
ஆர். கே. சுந்தரம்,	,,	1—0—0
தமிழ்த்தம்பி,	,,	1—0 0
எல். கிருஷ்ணசாமி,	,,	1—0—0
ஆழ்வார்,	,,	1—0—0
கோடிநாயுடு,	,,	1—0—0
தி. மு. க—சிவகெங்கை கிளை		10—0—0
வி. அண்ணாமலை, சென்னை		1—0—0
கோ. தெய்வசிகாமணி,		1—0—0
ஏ. அ. மலையப்பன், வசந்தநகர்		2—0 0
எஸ். எம். காதர், சேரன்மாதேவி		2—0—0
கோ. தேவராசன், கோலார்தங்கவயல்		1—0—0
கி சான்பாட்சா, பொள்ளாச்சி		1—0—0
எஸ். என். எல்லப்பன், சேலம் அம்மாபேட்டை		1—0—0
இரா. மாரியப்பன்,	,,	1—0—0
கே. பி நஞ்சப்பன்,	,,	2—0—0
ஏ. கே. தமமண்ணன்,	,,	2—0—0
பி. கே. கோபால்,	,,	2 0 0
இ. ஏ. ஆர். இராளப்பன்,	,,	2—0—0
சி. என் சாரங்கபாணி, சென்னை		1—0 0
தாளமுத்து நடராசன் நினைவுப்படிப்பகம், மதுரை		10—0 0
டி. எம் சுப்பிரமணியம், திருவாரூர்		[illegible]—0—0
டபிள்யூ ஜி. மாருதாம்பாள் குருசாமி.	,,	3—0—0
வி. ஏ. இலக்குமணன், வேலூர் (சேலம்)		5—0—0
எஸ் சின்னமணி, தூத்துக்குடி		1 0 0
ஏ. சண்முகசுந்தரம்,	,,	1—0—0
பி. தங்கச்சாமி	,,	1—0—0
திராவிட இயக்கப்பிரியன்,	,,	1—0—0
எஸ். தங்கவேல்	,,	1—0—0
எம். மாரியப்பன்	,,	0—8—0
எஸ் பி மாரியப்பன்	,,	0—8—0
ஏ. செல்லையா,	,,	0—8—0
ஏ. எஸ் கனி, மதுரை		1—0—0
எம் சுப்பிரமணியன், குமாரபுரம்		1—0—0
பி. சந்தோஷம், தூத்துக்குடி		1—0—0
டி. பால்பாண்டியன்	,,	2—0 0
என். காசிராஜன்	,,	1—0—0
எஸ் பால்ராஜ்	,,	1—0 0
அ. கு. அ. பொன்னுசாமி	,,	1—0—0
கோபால்ராஜன்	,,	1—0—0
டி. ஆர். வாடமல்லிகை	,,	1—0 0
ரையா	,,	1 0—0
டி. டி. பி. கே.	,,	1—0 0
ஏ. சு புசிர், நாகர்கோயில்		1—0—0
இ சுப்பிரமணியம்	,,	1—0—0
சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சிபுரம்		2 0—0
தி மு. க.—பெரியார் ராமசாமி நகரம் கிளை		15—0—0
		894—11 0

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

22 - 4 - 50

முள்விப்பட்டு:—புலவர் கோவிந்தன், சி. வி. குப்புசாமி.

23 - 4 - 50

கோவில்பாளையம்:—என். வி. நடராசன்.

பொன்னம்மாப்பேட்டை (சேலம்):—ஜி. பி. சோமசுந்தரம், அண்ணாதுரை, அன்பழகன், ஆசைத்தம்பி, சித்தையன்

மியூஸியம் முறையில் பயிற்சி

—(உ)—

கல்வி அமைச்சர் காட்டும் பாதை

சென்னை, ஏப். 19 - இனி ஒவ்வொரு ஆண்டும் சென்னையிலிருந்தும், ஜில்லாக்களிலிருந்தும் சுமார் 25 உபாத்தியாயர்களுக்கு மியூஸியம் முறையில் பயிற்சி அளிப்பதற்கு, சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளதாக, கல்வி அமைச்சர் தோழர் மாதவமேனன் உபாத்தியாயர்களுக்கு மியூஸியம் பயிற்சி சர்டிபிகேட்டுகள் வழங்கும் கூட்டத்தில் நேற்று மாலை தெரிவித்தார்.

உபாத்தியாயர்களுக்கென பிரத்யேகமாக இப்பயிற்சி சென்ற மூன்று வாரமாக, சென்னை மியூஸியத்தில் அதன் சூபரிண்டெண்ட் டாக்டர் ஏ. அய்யப்பனும் அவருடைய க்யூரேடர்களின் ஆதரவின் பேரிலும் நடைபெற்றது.

சுமார் 21 உபாத்தியாயர்கள் ஸர்டிபிகேட்டுகள் பெற்றனர். அவர்களுக்கு இரண்டு கோஷ்டியாக பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்வி மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் டாக்டர் அய்யப்பன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இரவில் கூட மியூஸியங்களை அங்கு திறந்து வைத்திருப்பதாகவும், பொதுமக்கள் இரவில் வந்து அங்கு வைத்திருக்கும் பூதக்கண்ணாடியின் மூலம், நட்சத்திரங்கள், கிரஹங்களின் நடமாட்டங்களை அறிகின்றனர் என்றும், ஆனால் நம்நாட்டில் மியூஸியம் கல்வி அபிவிருத்தி அடைவதற்கு ஒரு சிறந்த கருவி என்பதை நமது மக்கள் அறியவில்லை என்றும் டாக்டர் அய்யப்பன் விளக்கிக்கூறினார்.

கல்வி மந்திரி தோழர் மாதவமேனன் பேசுகையில், இதுவரை கண், காது, இவற்றின்மூலம் மாணவர்கள் பொது அறிவு பெற்றனர், ஆனால் இது சிறந்த முறையல்ல, ஏனெனில் மாணவர்களுக்கு எதையும் தொட்டு அறியவேண்டிய அவா இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கிறது. அதன்பொருட்டு மியூஸியம் பயிற்சிபெற்ற உபாத்தியாயர்கள் மாணவர்களுக்கு இம்முறைகளைக் கற்பித்தால், கண், காதுடன், கையையும், மூளையையும் உபயோகிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். இதனால், சுமார் 1000 ஸெகண்டரி பள்ளிக்கூடங்கள் இருக்கும் இந்த மாகாணத்தில் பயிற்சி பெற்றவர், மற்றொருவருக்கு போதித்தால் நம்நாட்டில் கல்வி அபிவிருத்தி அடைவதற்கு சாத்யமாகும்.

தோழர் தாமஸ் ஸத்யமூர்த்தி நன்றி கூறினர்.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

திருவண்ணாமலை
வந்தவாசி
திருவள்ளூர்
சைதாப்பேட்டை
போளூர்
பெருவளநல்லூர்
நெல்லை
நாகப்பட்டினம்
பெரிய காஞ்சிபுரம்
உசிலம்பட்டி
மன்னம்பட்டு
கச்சமங்கலம்
திருப்பூர்
மலையாண்டிப்பட்டணம்
முத்தியாலுப்பேட்டை
குன்றை சுல்தான்பேட்டை

மற்றைய கழகங்கள்

வெண்ணாற்றம்—(வி. சா. சங்கம்)
நாகப்பட்டினம் (வியாபாரிகள் சங்கம்)
சேத்தப்பட்டு (ச. மு. இ சங்கம்)
மதுரை (ப படிப்பகம்)
சிந்தாதிரிப்பேட்டை (தோழமைக் கழகம்)

"வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலன்றி தீண்டாமை ஒழியாது"

—(0)—

ஹரிஜன முன்னேற்றம் எனப்படுவது பொருளாதார முன்னேற்றமே

"பொருளாதாரத் துறையில் முன்னேறினால்தான் ஹரிஜனங்கள் விடுதலைபெற முடியும்.

என்று, தொழிலாளர்மந்திரி தோழர் ஜகஜீவன்ராம் இங்கு நடைபெற்ற ஹரிஜனங்கள் மாநாடொன்றில் குறிப்பிட்டார்.

பம்பாய் மாகாண தாழ்த்தப்பட்டோர் கழகத்தலைவரான தோழர் என். எஸ் கஜ்ரோல்கார் இம்மாநாட்டிற்குத் தலைமை வகித்தார் அவர் தனது தலைமைஉரையில் "உரிமைக்காகப் போராடும் சக்தியைத்தடுக்கும் சக்தி இவ்வுலகில் இல்லை" என்பதை வற்புறுத்திக் கூறினார். பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒரு தீர்மானத்தில்,

"தீண்டாமை" என்பது ஒழிக்கப்படவேண்டுமானல் ஹரிஜனங்களின் வாழ்க்கைத்தரம் உயரும்படி செய்யவேண்டும். கோவில் நுழைவினாலோ, தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களினாலேயே இந்து சமுதாயத்தை விட்டு தீண்டாமை ஒழிந்துவிடும் என்று சொல்ல முடியாது எனவே பொருளாதர முன்னேற்றமே ஹரிஜன முன்னேற்றத்தின் அடிப்படையாகும்."

என்று குறிப்பிட்டுள்ளது பின்னர் தாழ்த்தப்பட்டோர் நிலையினை ஆராய்ந்து ஆவன செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

அரபு அகதிகளுக்கு கல்வி வசதி

அம்மான், ஏப். 18—

ஜெரூசலத்தில் நடைபெற்ற ஒய். எம், ஸி ஏ. மகாநாட்டில் அரபு அகதிகளுக்குக் கல்வி வசதி அளிக்க ஏற்பாடு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

இம் மாநாட்டில் யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடா, ஸிரியா, எகிப்து, லெபனன், ஜோர்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அரபு அகதிகளுக்கென்று புது பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பச்சையப்பன் கல்லூரி பழைய மாணவர் விழா

சென்னை, ஏப். 17—

சென்னை பச்சையப்பன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டு விழா, கல்லூரி மண்டபத்தில் நடந்தது. நாடக ஆசிரியர் தோழர் பி. சம்பந்த முதலியார் தலைமை வகித்தார்.

கல்லூரியில் விஞ்ஞானத் துறையில் மேலும் சில பிரிவுகளை உண்டாக்கவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும் பழையமாணவர்கள் தாராளமாக நன்கொடையளிக்க வேண்டுமென்று கல்லூரித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் போல் புதிய கல்லூரி ஆரம்பிக்க இருப்பதைக் குறிப்பிட்டு அக்கல்லூரி தொடர்ந்து வெற்றிகரமாக நடக்கப் பழைய மாணவர் ஆவன செய்யவேண்டுமென்று தோழர் வெங்கடசாமி நாயுடு கேட்டுக் கொண்டார்.

நாஜிகள் ரகசிய ஆயுதம் தயாரிக்கிறார்களாம்

ஹாம்பர்க், ஏப். 19—

ஜெர்மனியிலிருந்து தப்பிச் சென்று தென்னமெரிக்காவுக்குச் சென்ற நாஜிடெக்னீஷியன்கள், ஒரு இரகசிய ஆயுதம் தயாரித்து வருவதாக 'டைல் டிராவலி' என்ற வாரப் பத்திரிகை ஒரு செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

இப்பத்திரிகையின் லோன்ஸ் அயர்ஸ் நிருபர் கூறுவதாவது:- ஜெர்மனியில் போக்வுல்ப் விமானக் கம்பெனியில் பிரதம டிஸைனராக இருந்த புரொபஸர் குர்ட்டாங்க், இப்பொழுது ஆர்ஜென்டைனா சர்க்காரின் டெக்னிகல் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருக்கிறார்.

முன்னாள் ஜெர்மன் விமானப்படைத் தலைவர் ஜெனரல் அடோல்ப்காலண்ட், ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களின் தலைவர், மற்றும் பல ஜெர்மன் டெக்னிஷியன்கள் முதலியவர்கள் தென்னமெரிக்காவில் இருக்கிறார்கள்.

ரயிலிலிருந்து விழுந்து தப்பிய சிறுவன்

பாரிஸ், ஏப். 19—

மாக்ஜெரிகா என்கிற 7 வயது இத்தாலிய சிறுவன், வேகமாகச் சென்றுக்கொண்டிருந்த போர்டோ-ஜினிவா எக்ஸ்பிரஸிலிருந்து விழுந்துவிட்டான். ஆனால் சில சொற்பகாயங்களுடன் உயிர் தப்பிப் பிழைத்தான். (குளோப்)

இந்தியா ஹவுஸ் முன்பு சத்யாக்ரகம்!

பத்திரிகை கிடைக்காததே காரணம்

லண்டன், ஏப். 18—

இந்தியா ஹவுஸ் முன்பு வெள்ளிக்கிழமை காலை 10-மணிக்கு தன் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதென்று தோழர் குருசரண் தாஸ் என்ற இந்தியர் உத்தேசித்திருக்கிறார்.

இவர் இந்தியா ஹவுஸ் பிரசுரிக்கும் 'இந்தியா நியூஸ்' என்ற பத்திரிகைக்குப் பணம் கட்டியிருக்கிறார். ஆனால் அவருக்கு பத்திரிகை வரவில்லை. இவர் இதைப்பற்றி நடைவண்டி 2½ பென்னி ஸ்டாம்பு ஒட்டி இரு கடிதங்கள் எழுதியும், இந்தியா ஹவுஸிலிருந்து பதில் கிடைக்கவில்லையாம்.

இந்த 5 பென்னியைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டும், இந்தியா ஹவுஸ் அதிகாரிகளின் போக்கைக் கண்டித்துமே இவர் சத்யாக்ரகம் செய்ய உத்தேசித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி தோழர் அட்லிக்குக் கூட தாம் எழுதினால், பதில் மறுநாளே கிடைத்துவிடுகிறதென்றும், ஆனால் இந்தியா ஹவுஸாருக்கு எவ்வளவு கடிதம் எழுதினாலும் பதில் கிடைக்காமலேயே இருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்.

இந்தியா ஹவுஸிற்கு வருபவர்களை அங்குள்ள அதிகாரிகள் 'ஸார்' என்று மரியாதை கொடுத்து அழைப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

இவரைப்பற்றி இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில், இவர் ஸ்வராஜ் ஹவுஸைச் சேர்ந்தவர் என்றும், இந்தியா ஹவுஸைக் குறைகூறுவதே ஸ்வராஜ் ஹவுஸின் வேலை என்றும், பண்டிட் நேரு வந்தபோதும் ஸ்வராஜ் ஹவுஸ் மெம்பர்களிடமிருந்து இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இருந்ததென்றும் கூறினார்.

சென்னையைச் சுரண்டுகிறீர்களே என்கிறார் திருமல்ராவ்

—( )—

அத்துமீறிய கேள்வி கேட்காதே என சபாநாயகர் கூறுகிறார்

"சென்னை மாகாணம் அளவுக்கு மீறி சுரண்டப்படுகிறது" என்று இந்தியப் பாராளுமன்றத்தில் பேசுகையில், தோழர்எம் திருமல்ராவ் கூறினார். அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை சென்னை மாகாணத்துக்கு ஐக்கிய மாகாணம் கொடுத்த அரிசிக்கு அதிக விலை வாங்கியுள்ளதென்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை கேள்வி, அத்துமீறியதென்று சபா நாயகர் கூறிவிட்டார் மாகாண அரிசியைவிட அதே ரகமுள்ள ஐக்கிய மாகாணத்து அரிசிக்கு 108 லட்சம் ரூபாய் அதிகமாக வாங்கவில்லையாவென்று தோழர் ஓ. வி. அழகேசன் கேட்டார். இதைச் சரிக்கட்ட உதவி ஏதாவது தரப்படுமா என்றும் அவர் கேட்டதிற்கு, அவ்வாறு உதவி அளிக்கப்படாவிட்டாலும், வேறு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன வென்று உணவு மந்திரி தோழர் தௌலத்ராம் கூறினார்.

அரிசிக்கு அதிகவிலைகோரப்படுகிறதென்று சென்னை சட்டசபையில் கண்டிக்கப்பட்டது, உணவு மந்திரிக்குத் தெரியுமாவென்று தோழர் கிருஷ்ணசாமிபாரதி கேட்டார்.

சென்னை மாகாணம்தான் ஐக்கிய மாகாணத்திடமிருந்து வாங்கும் அரிசியைவிற்பதால், 108 லட்ச ரூபாய் நஷ்டம் அடைவது உண்மைதானென்றும். இந்நிலை எல்லா மாகாணங்களுக்குந்தான் ஏற்பட்டுள்ளதென்றும் உணவு மந்திரி அறிவித்தார்.

கேட்ட கேள்விக்குத்தகுந்த பதில் தரப்படவில்லையென்று தோழர். கிருஷ்ணசாமி பாரதி வருத்தம் தெரிவித்துக்கொண்டார்.

சேலம் பொன்னம்மாபேட்டை தி. மு. க. கிளை

— கட்டிடத் திறப்பு விழா —

அன்புடையீர்! நாளது 23—4—50 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு பொன்னம்மாப்பேட்டை மல்லி செட்டித்தெருவில் அமைந்துள்ள 'அழகிரி பந்தலில்' டை கட்டிடத் திறப்புவிழா, நிகழ்ச்சிமுறையில் கண்டபடி நடைபெறும். தாங்கள்வருகைதந்து சிறப்பிக்கவேண்டுகிறோம்.

தலைவர்:- G. P. சோமசுந்தரம் அவர்கள்

கொடியேற்றல்:-க. அன்பழகன் M. A சென்னை

அழகிரி படத் திறப்பு:-A.V.P. ஆசைத்தம்பி

கட்டிடத் திறப்பு;—

தளபதி C. N. அண்ணாத்துரை M. A.

மாலை 6-மணிக்கு விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் தோழர் A. சித்தய்யன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு. ஒலிபெருக்கி உண்டு.

அனைவரும் திரண்டு வருக!

திராவிட முன்னேற்றக் கழகம் பொன்னம்மாபேட்டை கிளை.

அமெரிக்கா ஸ்டாம்பில் என்ஜின் டிரைவர் உருவம்

லண்டன், ஏப். 19—

அமெரிக்காவின் பிரபல என்ஜின் டிரைவர் கேஸி ஜோன்ஸின் உருவச்சித்திரம் அமெரிக்க ஸ்டாம்பில் இடம் பெற்றிருக்கிறது. ஒரு ரயில் விபத்தின்போது இவர் தன் உயிரைக் கொடுத்து [illegible] செய்தாராம்.

புதிய வெளியீடு

அண்ணாவின் புதியநூல் :—

தோழமையா? விரோதமா? 0-4-0

அண்ணாவின் சொல்வன்மை 0-5-0

(இ. ஆ. பெ. வி. முன்னுரையுடன்)

கலியாணமாய்விட்டதா? 0-8-0

(மு. வரதராசன் முன்னுரையுடன்)

மறுமலர்ச்சி நூல் நிலையம்.

18, ஆயலூர்முத்தையாமுதலி தெரு சென்னை.

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கும்படி உத்திரவு

—(0)—

ஹெபியஸ் கார்பஸ் மனுமீது தீர்ப்பு

சென்னை, ஏப். 17—

"நிலாமகாலிலிருந்து வேலை செய்த கெட்ட எண்ணம் படைத்தோரின் செய்கையால்தான், தோழியர் குஞ்மணி தங்கையாவின் உரிமைகள் பறிக்கப்பட்டதுடன், பைத்தியக்காரி என்று பட்டம் சூட்டி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்துவிட்டார்கள்; உடனே அவ்வம்மையாரை விடுதலை செய்யவேண்டும்" என்று நீதிபதிகள் பி. கோவிந்தமேனன் அவர்களும், பஷீர் அஹமது சயீத் அவர்களும் ஒரு ஹெபியஸ்கார்ப்பஸ் மனு வழக்கில் தீர்ப்பளித்தார்கள்.

போலீஸ் கமிஷனர் காரியாலயத்தில் வேலை செய்யும் தோழர் அருணா என்பவர் தம்முடைய ஒன்றுவிட்ட சகோதரியான தோழியர் குஞ்மணி தங்கையாவுக்குப் பைத்தியம் இல்லையென்றும், பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து உடனே விடுதலை செய்யவேண்டுமென்றும் ஹெபியஸ் கார்ப்பஸ் மனுவை உயர் நீதி மன்றத்தில் சமர்ப்பித்தார். தோழியர் குஞ்மணியின் கணவர் தோழர் அருள் தங்கையாவுக்குப் பணநெருக்கடி ஏற்பட்ட காரணத்தால், தன் மனைவியின் சுமார் ரூ. 5000 பெறக்கூடிய நகைகளைக் கேட்டாரென்றும், அவ்வம்மையார் கொடுக்க மறுத்தாரென்றும் அவர் கூறுகிறார். "அதன்பேரில் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது. நகைகளைப் பெறவேண்டுமென்ற காரணத்தால், தன் மனைவிக்குப் பைத்தியம் என்று கூறி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டார்கள்" என்று வாதி தரப்பில் கூறப்பட்டது.

உயர்நீதி மன்றத்தின் உத்திரவின்பேரில் சென்ற ஏப்ரல் 6-ந் தேதி பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் பிரதான அதிகாரி, தோழியர் குஞ்மணியை நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்து அவருடைய மூளை நிலையைப் பற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.

தோழியர் குஞ்மணியின் நிலை சாதாரணநிலைக்குத் திரும்ப மாற்றம் உள்ளதாக இல்லையென்று அறிக்கையில் கூறப்பட்டது. ஆஸ்பத்திரியில் அவ்வம்மையார் இருந்த 16 நாட்களில் அவரிடம் மூளைக் குணங்கள் எதுவும் காணவில்லையென்று அறிக்கையில் கூறப்பட்டது. தன்னுடைய கணவர் பலாத்காரமாகத் தன் கையிலிருந்த தங்க வளையல்களைக் கழற்ற முயன்றபோது அவர் கையைப்பிடித்துக் கடித்து விட்டதாக அவ்வம்மையாரே கூறியதாகவும் ஆஸ்பத்திரி அதிகாரி தெரிவித்தார்.

நீதிபதிகள் தீர்ப்பளிக்கையில் வேண்டுமென்றே செய்யப்பட்ட காரணத்தால் உடனே தோழியர் குஞ்மணியை விடுதலை செய்துவிடவேண்டுமென்றும், சம்பந்தப்பட்டவர்கள் குற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமென்றும் அறிவித்தார்கள்.

தோழர் ஜெ. எஸ். வேதமாணிக்கம் பிரதிவாதிக்காக வாதிட்டார்.

அங்கேயும் அப்படியே!

ஆக்லண்டு, ஏப். 19—

நியூஜிலாந்து தொழில் பெடரேஷனில் பிளவு ஏற்பட்டுவிட்டது. அதிலிருந்து பல பேர் வெளிக்கிளம்பி, தனியாக கோட்டா ஸ்தாபனம் ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றனராம்.

பிறப்பு

சென்னை, ஏப். 17—

புரசை தி. மு. க. தோழர் கே. திருவேங்கடம், அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் நவநீதம் அம்மையாருக்கு 15—4—50 அன்று பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குக் கண்ணகி எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'மாலைமணி' வளர்ச்சிக்கு ரூ 2 வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

• • •

விருத்தாசலம், ஏப். 18—

இவ்வூர் தோழர் க. சண்முகசுந்தரம் அவர்கள் துணைவியார், தோழியர் சகுந்தலா அம்மையாருக்கு 1—4—50 அன்று ஆண் மகவு பிறந்துள்ளது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ரூ. 2 வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.